# ஊழல்வாதக் கட்சி அரசியலை வேரறுத்து, மக்களே ஆட்சி செய்ய வழிவகுப்போம்!

இந்தியக் குடிமக்களாகிய நம் கடமை ஐந்தாண்டுகளுக்கொரு முறை வாக்களிப்பதோடு முடிந்து விடுவதில்லை. நாம் தேர்ந்தனுப்பும் பரதிநிதிகள் தங்கள் கடமையைச் சரிவரச் செய்ய வைப்பதும் நம் உரிமையும், கடமையும் ஆகும்.

எத்தனையோ இன்னல்கள். குடிநீர், வடிகால், மின்சாரம், சாலை வசதி என்று துவங்கி, கல்வி வசதி, மருத்துவ வசதி, வேலை வாய்ப்பு என்று நீண்டு கொண்டே போகிறது நம் தேவைகளின் பட்டியல்.

இப்படிப்பட்ட தினசரித் தேவைகளைத் தவிர இலஞ்ச ஊழல், வேளாண் பொருட்களுக்கு நியாயமான மதிப்பின்மை — செலவுக்கேற்ற விலையின்மை, தீரா நீதிமன்ற வழக்குகள், ஜாதி மதக் கலவரங்கள், ஒரு சிலர் கையில் நாட்டின் மொத்த சொத்தும் பொருளாதாரமும் முடங்கிக்கிடப்பது என பல இன்னல்கள்.

நாடாளுமன்றம், சட்டமன்றம் மற்றும் உள்ளாட்சி மன்றங்கள் இந்தப் பிரச்னைகளைத் தீர்ப்பதில் முழுமையாகத் தோல்வி கண்டிருக்கும் இந்நிலையில் மக்கள் நேரடியாகத் தலையிட்டு தங்கள் உரிமைகளைப் பெற வேண்டிய சூழல் ஏற்பட்டுள்ளது.

எல்லா வேட்பாளர்களையும் நிராகரிக்கும் உரிமை பெயரளவில் நோடா-வாக இருக்கிறது. ஆட்சி மன்ற உறுப்பினர்களைத் திரும்பி அழைக்கும் உரிமையையும், முக்கியத் திட்டங்களையும், சட்டங்களையும் மக்களே தீர்மானிக்கும் அதிகாரத்தையும் நாம் போராடிப் பெற வேண்டியுள்ளது.

இன்று நம்முடைய பல இன்னல்களுக்கு, கட்சி அடிப்படையிலான குடியாட்சி முறையே முழு முதற்காரணமாக உள்ளது. கட்சிகளின் தலைமை நியமிப்பவர்களுக்கு வாக்களிக்கும் கட்டாயத்திற்கு பதிலாக, இனி நாம் நமது ஆட்சிமன்ற வேட்பாளர்களை நாமே தீர்மானிக்கவும், பின்னர் தேர்ந்தெடுக்கவும் வேண்டும். நேரடி குடியாட்சி அல்லது மக்கள் ஆட்சி முறையை உருவாக்க வேண்டிய தருணமிது.

அப்படிபட்ட ஒரு மக்கள் ஆட்சி நமது எல்லா இன்னல்களையும் தீர்க்கவல்லதாக இருக்கும். ஒவ்வொரு கிராம மற்றும் நகர வட்டாரங்களிலும், அந்த இடத்தில் வாழும் மக்களின் கையிலேயே தங்கள் வளங்களை தங்கள் நலனுக்காக எவ்வாறு பயன் படுத்தலாம் என்று முடிவு செய்யும் உரிமை இருக்க வேண்டும்.

தேர்ந்தெடுத்த பிரதிநிதிகள் மக்களின் கட்டுப்பாட்டின் கீழ் கொண்டிருத்தல், அவர்களை தங்கள் கடமையைச் சரிவர செய்ய வைக்கும் உரிமை, தங்கள் பிரதிநிதிகளைத் தாங்களே தேர்வு செய்யும் உரிமை, தேர்ந்தெடுத்த பிரதிநிதிகளைத் திருப்பியழைக்கும் உரிமை, புதிய சட்ட வரைவுகள் முன்வைக்கும் உரிமை என பல்வேறு உரிமைகளைப் பற்றிய விழிப்புணர்வை உயர்த்தவும், அவற்றிற்காகப் போராடவும், அது பற்றிய ஒரு விழிப்புணர்வை பல்வேறு வழிகளில் உருவாக்கவும் வேண்டும்.

## முக்கிய வரைவுக் கோட்பாடுகள்

- கட்சிகள் ஆட்சி நடத்தும் தற்போதைய முறையை ஒழித்து மக்களின் நேரடிக் குடியாட்சி.
- தேசிய சொத்துக்கள் சிலர் கையில் முடங்கிவிடாமல் அனைவருக்கும் பயன்படச் செய்தல்.
- வேளாண்மையை அழிவின் விளிம்பிலிருந்து மீட்டெடுத்தல்.
- மக்களை மையமாக வைத்த உற்பத்தியும், முன்னேற்றத் திட்டங்களும்.
- அரசும், கட்சிகளும் திட்டமிட்டு நடத்தும் வகுப்புவாத வன்முறைகளுக்கு முடிவுகட்டுதல்.
- ஊழலற்ற வெளிப்படையான நிர்வாகம்.
- அரசியல் தலைவர்கள், உயர் அதிகாரிகள் சம்பந்தப்பட்ட வழக்குகளுக்கு விரைவு நீதிமன்றங்கள்
- காவல், நீதி, செயலாக்கம், சட்ட மன்றத் துறைகள் மக்கள் கட்டுப்பாட்டின் கீழ் கொண்டுவருதல்.
- தொழிலாளர்கள், உழவர்கள், பெண்கள், இளைஞர்களுடைய உரிமைகளுக்கும் மனித உரிமைக்கும் உத்திரவாதம்.
- மக்களுடைய நேரடி கட்டுப்பாட்டில் கீழ் கல்வி, சுகாதாரம், வாழ்வாதாரம் தொடர்பான துறைகள்.

மக்கள் நலனை மையமாக வைத்து, இந்தக் கோட்பாடுகளை மேலும் விவாதிக்கவும், விரிவு படுத்தவும், அவற்றை அடைவதற்கான வழி முறைகளையும், செயல் திட்டங்களையும் கண்டறிந்து செயல்படுத்தவும் மக்கள் நலத்தையும், மாற்றத்தையும் விரும்பும் அனைவரையும், மக்கள் அமைப்புக்களையும், கட்சிகளையும் அன்புடன் அழைக்கிறோம். வாரீர்!


## தொடர்புக்கு

மக்களாட்சி இயக்கம் (லோக் ராஜ் சங்கதன்) கைபேசி - 09818186610

காந்திய சமுதாய மேம்பாட்டு முனைப்பு, கைபேசி - 9444160839

தொழிலாளர் ஒற்றுமை இயக்கம் கைபேசி - 7598069667